அணைகளின் நீர் மட்டம் நிலவரம்

குண்டேரிப்பள்ளம்	: 18.49 அடி
பெரும்பள்ளம்	: 20.84 அடி
வரட்டுப்பள்ளம்	: 15.42 அடி

முட்டை விலை நிலவரம்

முட்டை விலை : 650 பைசா (ஒன்று)
பிராய்லர் கறிக்கோழி : ரூ.141 (ஒரு கிலோ)
முட்டைக் கோழி : ரூ.110 (ஒரு கிலோ)

ஏற்காடு மாண்ட்போர்ட் மேல்நிலைப் பள்ளியில் நடந்த 110–வது ஆண்டு விளையாட்டு விழாவில் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஏற்காடு மாண்ட்போர்ட் பள்ளியில் 110-வது ஆண்டு விளையாட்டு விழா

■ சேலம்

ஏற்காடு மாண்ட்போர்ட் மேல்நிலைப்பள்ளியில் 110-வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. விழாவில் மாண்ட்போர்ட் பள்ளியின் முன்னாள் மாணவரும், முதுகெலும்புமற்றும்நரம்பியல் அறுவைசிகிச்சைநிபுணருமான டாக்டர் ஜி.பாலமுரளி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு தொடங்கி வைத்தார்.

மாண்ட்போர்ட் பள்ளி முதல்வர் பா.ஆரோக்கிய சகாயராஜ் வரவேற்றார். விழாவில்மாணவ,மாணவிகளின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை கவர்ந்தது. விளையாட்டு விழாவில் ஓட்டம், தொடர் ஓட்டம், நீச்சல் என பல போட்டிகள் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சிறப்புவிருந்தினர் டாக்டர் ஜி.பாலமுரளி மற்றும் டாக்டர் வெண்ணிலா பாலமுரளி ஆகியோர் பரிசுகள் வழங்கினர்.

விழாவில் தடகளம், டிரில் மற்றும் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை கேபிரியல் அணியும், நீச்சல் மற்றும் கலைநிகழ்ச்சிக்கான கேடயத்தை மாண்ட்போர்ட் அணியும், அணிவகுப்பிற்கான கேடயத்தை பேட்ரிக் அணியும் பிடித்தன.

விழாவில் மாண்ட்போர்ட் அருட்சகோதரர்கள் வர்கீஸ், ஆரோக்கியசாமி, ஆண்டனி, பீட்டர் ராஜன், டேவிட் ராஜா, லூர்துசாமி, சுனில், அலெக்ஸாண்டர், அந்தோணிசாமி, ஏற்காடு இருதய ஆண்டவர் பள்ளி முதல்வர் அருட்சகோதரி மெர்லின் மற்றும் மாண்ட்போர்ட் பள்ளி முன்னாள் மாணவ மாணவியர், பெற்றோர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

கேஎம்சிஹெச் இருதய சிகிச்சை நிபுணர் வினோத் துரைசாமி நாளை சேலம் வருகை

■ சேலம்

கோவை கேஎம்சிஹெச் மருத்துவமனையின் இருதய சிகிச்சை நிபுணர் வினோத் துரைசாமி நாளை (8-ம் தேதி) சேலம் வருகிறார்.

கோவை மெடிக்கல் சென்டர் & மருத்துவமனையின் குழந்தைகளுக்கான இருதய சிகிச்சை சிறப்பு மருத்துவர் வினோத் துரைசாமி, சேலம் மெய்யனூர், இட்டேரி ரோட்டில் உள்ள ராமலிங்கம்-ஸ் ஹாஸ்பிடலுக்கு நாளை (8-ம் தேதி) வருகை தருகிறார்.

இதுகுறித்துமருத்துவமனை நிர்வாகிகள் கூறியதாவது:

பிறவி இருதய கோளாறு, இருதய அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகள், தோல் நீல நிறமாக மாறுவது, விளையாடும் போது சோர்வு ஏற்படுவது, மரபணு குறைபாடுகள் உள்ள குழந்தைகள், சுவாசிப்பதில் சிரமம், அடிக்கடி நுரையீரல் தொற்று ஏற்படுவது மற்றும் உடல் எடை அதிகரிக்காமல் இருப்பது, மேலும் பிறந்த குழந்தை முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இருதய கோளாறு இருப்பின் மருத்துவரை அணுகலாம் என்று தெரிவித்துள்ளனர்.

ஈரோடு மாவட்டம் பவானி அருகே தமிழக விவசாயிகள் சங்கம்சார்பில்நடைபெற்றஆர்ப்பாட்டத்தில்ஏராளமானோர் பங்கேற்றனர்.

பயிர்க்கடன் முழுவதும் தள்ளுபடி கோரி விவசாய சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

■ ஈரோடு

பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்யக் கோரி ஈரோடு மாவட்டம் பவானி அருகே விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஈரோடு மாவட்டம் பவானி அருகே உள்ள பெரியபுலியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்க கட்டிடம் முன்பு தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்துக்கு தமிழக விவசாயிகள் சங்க மாநில கவுரவத் தலைவர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். முதல்வர் விஜய் தேர்தல் அறிக்கையில் வெளியிட்டதுபோல விவசாயிகளின் கடன்களை முற்றிலும் தள்ளுபடி செய்யக் கோரி முழக்கங்கள் எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் பவானி, கவுந்தப்பாடி, பெரியபுலியூர், சின்னபுலியூர் உட்பட சுற்று வட்டாரக் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிறரி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:

repsalem@hindutamil.co.in

சேலம் தாதகாப்பட்டியில் போக்குவரத்து நெரிசல்

சாலையோரம் இருந்த சிறு கடைகள், விளம்பர பலகைகள் அகற்றம்

■ சேலம்

சேலம் தாதகாப்பட்டி-பழைய பேருந்து நிலையம் வரையிலான சாலையில், ஆங்காங்கே சாலையை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த சிறு கடைகள், விளம்பர பலகைகளை அகற்றி போலீஸார் நடவடிக்கை எடுத்தனர்.

சேலம் மாநகர பகுதிகளின் பல்வேறு இடங்களில் சாலையை ஒட்டி சிறு சிறு கடைகள் செயல்பட்டு வருவது, சாலையை ஒட்டி விளம்பர பலகைகள் வைக்கப்பட்டிருப்பது ஆகியவற்றால், அடிக்கடி போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவது வாடிக்கையாகி வருகிறது. இந்நிலையில், சேலம் தாதகாப்பட்டியில் இருந்து சேலம் பழைய பேருந்து நிலையம் வரையிலான சாலையில், சாலையை ஒட்டிய ஆக்கிரமிப்புகளால் சாலையின் அகலம் குறைந்து எந்நேரமும் போக்குவரத்து நெருக்கடி இருப்பதும், அவசர உதவி வாகனங்கள் செல்வதில் கூட இடையூறு நிலவுவது குறித்து, மாநகர காவல்துறைக்கு புகார்கள் வந்தன.

சேலம் தாதகாப்பட்டி பகுதியில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டிருந்த சாலையோர ஆக்கிரமிப்பு கடைகளை போலீஸார் அகற்றினர்.

படம்: எஸ்.குரு பிரசாத்

இந்நிலையில், மாநகர காவல் போக்குவரத்து துறை போலீஸார், ஆயுதப்படை போலீஸார் 20-க்கும் மேற்பட்டோர், தாதகாப்பட்டி தொடங்கி சேலம் பழைய பேருந்து நிலையம் வரையிலான சாலை நெடுகிலும், சாலையை ஒட்டி செயல்பட்டு வந்த சிறு சிறு கடைக்காரர்களிடம், போக்குவரத்து நெருக்கடியை எடுத்துக்கூறி, அந்த கடைகளை சாலையை விட்டு விலகி அமைக்க நடவடிக்கை எடுத்தனர். மேலும், சாலையை ஒட்டி ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த விளம்பர பலகைகளையும் போலீஸார் அப்புறப்படுத்தினர். சில இடங்களில் சாலையின் எல்லைக்கோடு வரை, ஆக்கிரமிப்பு கடைகள் இருந்தன. இந்த கடைகள் அகற்றப்பட்ட நிலையில், சாலையின் அகலம் சற்று கூடியது போல, காணப்பட்டது.

இதனிடையே, சாலையோரம் உள்ள கடைகளுக்கு வருபவர்கள், தங்கள் இரு சக்கர வாகனங்களை சாலையை ஒட்டியும், நடைபாதையிலும் நிறுத்தாமல், போக்குவரத்துக்கு இடையூறின்றி வாகனங்களை நிறுத்த வேண்டும் என்று வாகன ஓட்டிகளிடம் போலீஸார் அறிவுறுத்தினர். போலீஸாரின் நடவடிக்கையைத் தொடர்ந்து, தாதகாப்பட்டி சாலையில் இதுநாள் வரை இருந்த போக்குவரத்து நெருக்கடி சற்று குறைந்துள்ளது.

இதுகுறித்து பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கூறுகையில், சேலம் மாநகரின் பிற பகுதிகளிலும் போலீஸார் இதேபோல, உடனடி நடவடிக்கை எடுத்து, சாலையை ஒட்டியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவேண்டும், மீண்டும் அந்த இடங்களில் ஆக்கிரமிப்புகள் ஏற்படாதவாறு தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று கூறினர்.

அந்தியூர் அருகே சாலை வசதி இல்லாததால் அவதி

ஈரோடு ஆட்சியரிடம் பொதுமக்கள் புகார்

■ ஈரோடு

ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகே சாலை வசதி இல்லாததால் அவதியடைந்து வருவதாக, ஆட்சியரிடம் மக்கள் புகார் அளித்தனர்.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் முகாம் நேற்று நடைபெற்றது. ஆட்சியர் கந்தசாமி தலைமை வகித்து பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற்றார். தார்சாலை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, மகளிர் உரிமைத் தொகை, வேலைவாய்ப்பு, கல்விக்கடன் என மொத்தம் 385 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன.

அந்தியூர் அருகேகுறுமானூர் காடு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் அளித்த மனுவில் கூறியிருப்பதாவது:

ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டப்பேரவைத் தொகுதிக் குட்பட்ட அம்மாப்பேட்டை ஒன்றியம், வெள்ளித்திருப்பூர் ஊராட்சிக்கு உட்பட்ட குருமானூர் காடு கிராமத்தில் 80-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசிக்கிறோம். மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி வனப்பகுதிக்குள் எங்கள் கிராமம் அமைந்துள்ளது.

கடந்த 4 ஆண்டுகளுக்குமுன்பு எங்கள் கிராமத்துக்கு பிளாஸ்டிக் சாலை அமைக்கப்பட்டது. தற்போது சாலை சேதமடைந்து குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது. எங்கள் பகுதியில் யானை நடமாட்டம் உள்ள நிலையில், சேதமடைந்த சாலை வழியாக வேகமாக ஓடக்கூட முடியாது. எனவே, இச்சாலையை சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும், என கூறப்பட்டுள்ளது.

குறைதீர் முகாமில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், சமூக நல அலுவலர் பூங்கோதை உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல்லில் தனியார் பேருந்துகளில் கட்டணம் திடீர் உயர்வால் பயணிகள் அதிருப்தி

■ நாமக்கல்

சர்வதேச அளவில் நிலவும் சூழ்நிலை மற்றும் டீசல் விலை உயர்வின் தாக்கத்தால், லாரி வாடகை கட்டணமும் உயர்ந்துள்ளது. இதன் எதிரொலியாக அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலையும் உயரக்கூடும் என்ற அபாயம் நிலவி வருகிறது.

இந்நிலையில், நாமக்கல்லில் இருந்து சேலம் உள்ளிட்ட வெளி மாவட்டங்களுக்கு இயக்கப்படும் தனியார் பேருந்துகளில் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

குறிப்பாக, நாமக்கல்–சேலம் இடையே இதுவரை ரூ.33 ஆக இருந்த கட்டணம் தற்போது ரூ.38 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதேபோல், நாமக்கல்–ஈரோடு இடையே ரூ.38 ஆக இருந்த கட்டணம் ரூ.45 ஆகவும், நாமக்கல்–கரூர் இடையே ரூ.30 ஆக இருந்த கட்டணம் ரூ.40 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

டீசல் விலை உயர்வை சமாளிக்க இக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டண உயர்வால் பயணிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். மேலும், கட்டண உயர்வை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பாக நாமக்கல் தெற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலர் முருகேசன் கூறும் போது, "பேருந்து உரிமையாளர்கள் தன்னிச்சையாக கட்டணத்தைஉயர்த்தமுடியாது. கட்டண உயர்வு தொடர்பாக புகார் இருந்தால் ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

கைத்தறி ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்தால் சட்ட நடவடிக்கை

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் எச்சரிக்கை

■ நாமக்கல்

கைத்தறிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நாமக்கல் மாவட்ட ஆட்சியர் லி. மதுபாலன் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

கைத்தறிக்கென சில வரையறைக்குட்பட்ட பேட்டு டிசைனுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி சேலைகள், பேட்டு டிசைனுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி வேட்டிகள், டவல் மற்றும் அங்கவஸ்திரம், லுங்கி, போர்வை, படுக்கை விரிப்பு, அலங்காரத் துணி, ஜமக்காளம், உடைத் துணி, கம்பளி, சால்வை, உல்லன் ட்வீட், சத்தார் ஆகிய 11 ரகங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இந்த ரகங்களை விசைத் தறியில் உற்பத்தி செய்வது சட்டவிரோதமாகும். எனவே, இந்த 11 ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்பவர்கள் மீது காவல் துறை மூலம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், நீதிமன்றத்தில் அதிகபட்சமாக விசைத்தறி ஒன்றுக்கு ரூ.10,000 முதல் ரூ.25,000 வரை அபராதம் அல்லது 3 மாதம் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் சேர்த்தும் தண்டனையாக விதிக்கப்படும்.

எனவே, விசைத் தறியாளர்கள் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் குறித்து உரிய விழிப்புணர்வு பெற்று, விதிமுறைகளுக்கு உட்பட்டு உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில், திருச்செங்கோடு வட்டம் எலச்சிபாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிளாப்பாளையம் ஊராட்சி மக்கள், ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பு வழங்கவும், குடிநீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவும் வலியுறுத்தி, திரளாக வந்து மனு அளித்தனர்.

ஈரோட்டில் நாளை மின் பயனீட்டாளர் குறைதீர் முகாம்

■ ஈரோடு

ஈரோடு மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் தலைமையில் மின் பயனீட்டாளர்கள் மாதாந்திர குறைதீர் கூட்டம் நாளை (8-ம் தேதி) காலை 11 மணிக்கு ஈவிஎன் சாலையில் உள்ள மின்வாரிய செயற்பொறியாளர் ஈரோடு கோட்ட அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் ஈரோடு தெற்கு மின்வாரிய கோட்டத்துக்கு உட்பட்ட சோலார், கணபதிபாளையம், கொடுமுடி, சிவகிரி, கஸ்தூரிபாய் கிராமம், அரச்சலூர், எழுமாத்தூர், மொடக்குறிச்சி, அனுமன்பள்ளி, முள்ளாம் பரப்பு ஆகிய பகுதிகளில் உள்ள மின் பயனீட்டாளர்கள் மேற்பார்வை பொறியாளரை நேரில் சந்தித்து குறைகளை தெரிவித்து நிவர்த்தி பெறலாம் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வியர்க்கதே

மேட்டூர்

மேட்டூர் நகர், மேச்சேரி, மேட்டூர் ஆர்எஸ். துணை மின் நிலையங்களில், மாதாந்திர பராமரிப்புப் பணி இன்று (7-ம் தேதி) மேற்கொள்ளப்படுகிறது. எனவே, இந்த மூன்று மின் நிலையங்களுக்கு உட்பட்ட மேட்டூர் நகரம், சேலம் கேம்ப், மாதையன் குட்டை, நவப்பட்டி, கோல்நாயக்கன்பட்டி, புதூர், மேச்சேரி, சூரியனூர், தெத்திகிரிப்பட்டி, அமரம், மல்லிகுந்தம், வேங்கானூர், பள்ளிப்பட்டி, ஆண்டிக்கரை, பொட்டனேரி, சுணான்டியூர், கீரைக்காரனூர், செங்காட்டூர், குதிரைகாரனூர், பாரக்கல்லூர், எம்.காளிப்பட்டி, மேட்டூர் ஆர்எஸ், கருமலைக்கூடல், சாம்பள்ளி, வீரனூர், கோனூர், மடத்துப்பட்டி, கூழையூர், கந்தனூர், விருதாசம்பட்டி, குள்ளமுடையானூர், குஞ்சாண்டியூர், ராமன்நகர், தேசாய்நகர், தங்கமாபுரிபட்டணம், கருப்புரெட்டியூர், சின்னக்காவூர், தாழையூர், தொட்டில்பட்டி ஆகிய பகுதிகளில் இன்று காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் விநியோகம் இருக்காது என்று மேட்டூர் அணை கோட்ட மின் வாரிய செயற்பொறியாளர் வனிதா தெரிவித்துள்ளார்.

புன்செய் புளியம்பட்டி

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தை அடுத்துள்ள புன்செய் புளியம்பட்டி துணைமின் நிலையத்தில் நாளை (8-ம் தேதி) மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளது. எனவே நாளை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை புளியம்பட்டி, நல்லூர், மாதம்பாளையம், எரங்காட்டுபாளையம், பொன்னம்பாளையம், வெங்கநாயக்கன்பாளையம் மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் மின்விநியோகம் இருக்காது என மின்வாரியம் அறிவித்துள்ளது.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: 140/3, நான்கு சாலை, BSNL அலுவலகம் எதிரில், பரமதி வேலூர், நாமக்கல் மாவட்டம், தமிழ்நாடு - 638182

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	04.07.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித்தொகை (EMD)
1183210180000020 1.Mr.மணி 2. Mrs.பொதுமணி மணி	(I) 05.12.2023 & 26.11.2023 அன்றுள்ளபடி ₹ 11,55,848/- (ரூபாய் பதினோரு லட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரத்து எண்ணூற்று நாற்பத்து எட்டு மட்டும்) (ii)அடையாளபூர்வமான சுவாதீனம் 06.05.2024 நேரடியான சுவாதீனம் 15.03.2025	₹ 21,19,297.57 (ரூபாய் இருபத்து ஒன்று லட்சத்து பத்தொண்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்)	₹ 11,96,000/- (ரூபாய் பதினோரு லட்சத்து தொண்ணூற்று ஆறாயிரம் மட்டும்)	₹ 1,19,600/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தொண்பதாயிரத்து அறுநூறு மட்டும்)

சொத்து விவரம்: ஐட்டம் எண்.I: நாமக்கல் பதிவு மாவட்டம், வேலூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய நத்தம் சர்வே எண்.194, புதிய நத்தம் சர்வே எண்.393/8, தற்போதைய பாகம் பிரிக்கப்பட்ட நத்தம் சர்வே எண். 393/8B, **சேலூர் கிராமம், பரமத்திவேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக வடக்கு பக்கம் 57 அடி, தெற்கு பக்கம் 42 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பக்கம் 41 ½ அடி, மேற்கு பக்கம் 31 அடி மொத்தம் **1795 சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: P.நடராஜன் "மாயவன்கோவில்" நிலத்திற்கு வடக்கு, பூபதி வீட்டு மனை, ஐட்டம் 2-ன் காலி நிலத்திற்கு தெற்கு, செங்கோட கவுண்டர், முருகேசன் மற்றும் மற்றவர்கள் நிலத்திற்கு கிழக்கு, வடுகம்பாளையம்புதூர் செல்லும் தெற்கு - வடக்காக பஞ்சாயத்து வழிப்பாதைக்கு மேற்கு.

ஐட்டம் எண்.II: நாமக்கல் பதிவு மாவட்டம், வேலூர் சார் பதிவு அலுவலகம் எல்லைக்குட்பட்ட பழைய நத்தம் சர்வே எண்.194, புதிய நத்தம் சர்வே எண்.393/8, தற்போதைய பாகம் பிரிக்கப்பட்ட நத்தம் சர்வே எண். 393/8B, **சேலூர் கிராமம், பரமத்திவேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இரு பக்கமும் 5 அடி, தெற்கு வடக்காக இருபக்கமும் 25 ½ அடி மொத்தம் **127 ½ சதுர அடி நிலம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ஐட்டம் I சொத்துக்கு வடக்கு, 7 லிங்க் அகல தெற்கு வடக்கு வழிப்பாதைக்கு தெற்கு, கந்தசாமி கவுண்டர் வீட்டு மனைக்கு கிழக்கு, பூபதி வீட்டு மனைக்கு மேற்கு. **ஐட்டம் எண்கள்.I மற்றும் II-ன் மொத்த பரப்பு = 1922 ½ சதுர அடி நிலம். இந்த சொத்தின் வீட்டு கட்டிடத்தின் கதவு எண்.1/83,** அதனுடன் பொது உபயோக உரிமைகள், பொது சுவர், கழிவுநீர் வசதிகள், வழிப்பாதை மற்றும் அனைத்து அனுபந்த உரிமைகள். **மேற்குறிப்பிட்டுள்ள சொத்தானது Mr.மணி-க்கு சொந்தமானது (எண்.1-ல் உள்ள நபர்)**

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 29.07.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி	சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்
தேதி: 28.07.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை	27.07.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
Mr. ராம்பிரசாத் - 95009 96689 / Mr.டிஜோ ஷாஜன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr. Prabhakaran (Mob: 74182 81709)**) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 07.07.2026 ஒப்பம்/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun on behalf of KSL MEDIA LIMITED and Printed by M Jegadesh Kumar at THG PUBLISHING PVT.LTD. 391/1 & 391/2 Kamaraj Road, Uppilipalayam, Coimbatore, Tamil Nadu 641015. Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).

CB-SM